# அறத்தொடு நிற்றல்: தொல்காப்பியமும் பதினெண் கீழ்க்கணக்கும்

**செ. சந்திரன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழியல் துறை**
**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**
**திருச்சிராப்பள்ளி**

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகம், புறம் பற்றிய செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இவ்வதிகாரத்தில் இடம்பெறும் கருத்துகளை ஒட்டி சங்க இலக்கியத்திலும் அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் அகத்துறைகளைச் சார்ந்த ஒரு துறையாக அறத்தொடு நிற்றல் விளங்குகின்றது. சங்க இலக்கியத்திற்குப் பின்னால் வந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆறு அகநூல்களைக் கொண்டு விளங்குகின்றது. அகநூல்களில் அகத்துறை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம், சங்க இலக்கியத்தோடு பதினெண் கீழ்க்கணக்கை ஒப்படும்போது சில துறைகள் ஒத்தும் சில துறைகள் மாறுபட்டும் அமைந்துள்ளன. தொல்காப்பியம் கூறிய அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளோடு பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களில் இடம்பெறும் அறத்தொடு நிற்றல் துறை பற்றிய செய்திகளை ஒப்பிட்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறத்தொடு நிற்றல்

சொ. பரமசிவம் ‘‘தலைவன் தவ்வியை விரும்புவதும், தலைவி தலைவனை விரும்புவதும் இயற்கை. அறத்தின் வழிப்பட்ட செயலுமாகும். தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டுச் சந்தித்து மகிழ்கின்ற இக்களவு தானாக வெளிப்படுவதற்கு முன்பு, உரியவர்க்கு வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் வந்துவிடும். அங்ஙனம் உரியவர்க்கு உரியவர் வெளிப்படுத்தும்போது உரிய சொற்களால் பக்குவமாகத் தொடர்புடையார்க்குத் தீங்கோ, இழுக்கோ ஏற்படாது, அவர்தம் நிலை தாழ்ந்திடாது நன்மை ஏற்படுமாறு முரண்பாடில்லாத சொற்களால் முறையாகக் களவினை வெளிப்படுத்துவர;. இங்ஙனம் முறையாக நேரான வழியில் களவினை வெளிப்படுத்துதற்கு ‘அறத்தொடு நிற்றல்’ ”எனக் குறிப்பிடுகிறார்.[1]

தலைவி தன்னுடைய தோழிக்கும், தோழி செவிலிக்கும் (வளர்ப்புத்தாய்), செவிலி நற்றாய்க்கும் (பெற்றத்தாய்), நற்றாய் தந்தைக்கும் தன்னையர்க்கும் அறத்தொடு நிற்பதனை,

**தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்**
**பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்**
**செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்**
**நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு**
**நிற்கும் என்ப நெறியுணர்ந் தோரே**

என்ற நம்பியகப்பொருள் நூற்பா-48 சுட்டுகின்றது.

அறத்தொடு நிற்றல் என்பதற்கு “களவினைத் தமா்க்கு முறையே தெரியப்படுத்துதல்” என்று கழகத் தமிழ் அகராதி பொருள் பகா்கின்றது.[2]

நச்சினார்க்கினியர், “அறனென்று சொல்லப்படுந்தன்மை இருவர் கண்ணுங் குற்றந்தீர்ந்த எதிர்ப்பாடென்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துச் செலுத்தினும் என்றது, புனறருபுணர்சியும், பூத்தரு புணர்ச்சியுங், களிறுதரு புணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவள் நற்றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துதலாம். எனவே, அவள் தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர;த்துதலும் அதனை மீண்டுவந்து தலைவிக்கு உணா்த்துதலும் பெற்றாம். அவ்வறத்தொடு நிலை எழுவகைய (207) எனப் பொருளியலுட் கூறுப”[3] என்கின்றார்.

சரளா ராசகோபாலன் அறத்தொடு நிற்றலைப் பற்றிக் கூறும்போது, “அறத்தொடு நிலையாவது தான்கொண்ட ஒழுக்கத்தின்கண் நிற்றல். அறம் ஒழுக்கம் அதாவது களவொழுக்கம் முதிர்ந்து கற்பொழுக்கம் ஒழுகுதல்”[4] என்பா்.

“பொதுமக்களின் அலர்ப்பேச்சு, இற்செறிப்புப் போன்ற சோதனையான நேரங்களில் தலைவி தன் களவுக்காதலைத் தோழிக்குரைப்பாள் அல்லது தோழி தாய்க்குரைப்பாள். இவ்வாறு களவுக்காதலை வெளியிடுதல் ‘அறத்தொடு நிற்றல்’ எனக் குறிக்கப்பெறும்”[5] என்று தமிழண்ணல் கூறுகின்றாா்.

மேற்கண்ட அறிஞர்களின் கருத்துப்படி, ஊழின் வழியாக நிகழ்;ந்த இயற்கைக் கூட்டத்தைக் குற்றமில்லாத வகையாய்த் தலைவி தோழியிடமும், தோழி செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தை-தமையன்மாா்க்கும் அறத்தொடு நின்று தலைவியின் திருமணத்தை முடித்து வைப்பது அறத்தொடு நிற்றல் எனலாம்.

**அறத்தொடு நிற்றல் பற்றித் தொல்காப்பியர் கூறும் செய்திகள்**

தொல்காப்பியர் களவியலில் ‘நாற்றமும் தோற்றமும்’ என்ற நூற்பாவில் தோழி கூற்று நிகழ்த்தும் 32 இடங்களைச் சுட்டுகின்றார். அவற்றுள் ஏழு சூழல்கள் அறத்தொடு நிற்றல் தொடா்பானவையாகும். இதனை,

**ஐயச் செய்கை தாய்க்கெதிர; மறுத்துப்**
**பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்**
**அவன்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்**
**பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்**
**முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப்**
**புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும் (தொல்.களவு.112:37-42)**

என்ற தொல்காப்பிய நூற்பா வரிகள் தெளிவுபடுத்துகின்றன. தாய் ஐயப்படுமிடத்துக் களவையே மறுத்துப்பேசி களவைப்பேணலும் இற்செறிப்பின் போதும்; வெறியாட்டின் போதும் நொதுமலா் வரைவின் போதும் தலைவன் வரைவைத் தமா் மறுக்கும் போதும் தலைவி, வேலன் முதலியோரைச் சுட்டிக் களவை வெளிப்படுத்தும் போதும்; தலைவன்-தலைவியது களவொழுக்க இயல்புகளை எடுத்தியம்பும் போதும் தோழி அறத்தொடு நிற்பாளென்பது இதன் விளக்கமாகும். இவ்வேழு சூழல்களுள் முதல் ஐந்தும் தோழி பேசும் சூழல்களையும் இறுதி இரண்டும் தோழி பேசும் முறையையும் விளக்குகின்றன.

தோழி, நொதுமலா் வரைவு, இற்செறிப்பு, வெறியாட்டு, இன்னபிற சூழல்களில் மட்டும் தான் தலைவியின் களவொழுக்கத்தினைத் தமரிடம் எடுத்துக்கூறி அறத்தொடு நிற்பாள். மற்ற

நேரங்களில் தலைமக்களது களவு வாழ்க்கையை வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கும் மரபில்லை. இதனை,

**அறத்தொடு நிற்கும் காலத்தன்றி**
**அறத்தியல் மரபிலள் தோழி என்ப - (தொல்.பொருளி. 203)**

என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவுபடுத்துகின்றது.

தோழி, தலைவன் தலைவியின் களவு நிலையினை (எளித்தல் - தலைவனை எளியனாகக் கூறுதல். ஏத்தல் - தலைவனை உயர்த்திக் கூறுதல். வேட்கையுரைத்தல் - தலைவன் மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவி மாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல். கூறுதல் - தலைவியைத் தலைவனுக்கு கொடுக்க வேண்டும் என்பது படக் கூறுதல். உசாவுதல் - வெறியாட்டும் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடும் பிறரோடும் உசாவுதல். ஏதீடு தலைப்பாடு - யாதானும் ஒரு ஏதுவை இடையிட்டுக் கொண்ட தலைப்பட்டமை கூறுதல். அதாவது 'புனலிடை உதவினான்', 'களிற்றிடை உதவினான்', தழையும் கண்ணியும் தந்தான் என்று கூறுதல். உண்மை செப்பும் கிளவி - பட்டாங்கு கூறுதல்) எனும் ஏழு நிலைகளில் எடுத்துக்கூறி செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். இதனை,

**எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**
**கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ**
**ஏழவகைய என்மனார் புலவர் - (தொல்.பொருளி. 204)**

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியலாம்.

### பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களில் அறத்தொடு நிற்றல்

பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்களில் கிடைக்கின்ற 405 பாடல்களில் ஒன்பது பாடல்கள் அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்துள்ளன. அவற்றில் தோழி கூற்றாக ஆறு பாடல்களும், தலைவி கூற்றாக இரண்டு பாடல்களும்,நற்றாய் கூற்றாக ஒரு பாடலும் அமைந்துள்ளது.

### தோழி கூற்றுப் பாடல்கள்

கீழ்க்கணக்கு அகநூல்களில் தோழி கூற்றில் அறத்தொடு நிற்றல் துறையில் ஆறு (திணைமாலை நூற். - 2, 12, 14, 39, 62; கைந்.- 8) பாடல்கள் அமைந்துள்ளன. தோழி கூற்றுப் பாடல்களை ஐந்து வகையாகப் பகுக்கலாம்.

1. களிறுதரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது (திணைமாலை நூற்றைம். - 2, 14)
2. புனல்தரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது (திணைமாலை நூற்றைம். - 12)
3. பூத்தரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது (திணைமாலை நூற்றைம். - 39)
4. தலைவனை உயர்த்திச் சொல்லியது (திணைமாலை நூற்றைம். - 62)
5. தலைவி வேட்கை குறித்துச் சொல்லியது (கைந்நிலை - 8)

### (அ) களிறுதரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது

கீழ்க்கண்ட இரண்டு பாடல்களின் கருத்துகளும் தொல்காப்பியர் கூறிய ஏதீடு தலைப்பாடு (களிறுதரு புணர்ச்சி) என்ற வகையோடு பொருந்தி அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்துள்ளது.

**சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை**
**யள்ளி யளகத்தின் மேலாய்ந்து - தெள;ளி**
**யிதணாற் கடியொடுங்கா வீங்கடா யானை**
**யுதணாற் கடிந்தா னுளன் - (திணைமாலை நூற். - 2)**

என்ற பாடலின் மூலம், தலைவியைத் தாக்க வந்த யானையைத் தன் அம்பினால் விலகியோடச் செய்து காப்பாற்றிய தலைவன், தலைவியின் உள்ளத்தில் சிறப்புற்று விளங்குகின்றான் என்று கூறி தோழி, செவிலியிடம் அறத்தொடு நின்றதை அறியலாம்.

**வருக்கை வளமலையுண் மாதரும் யானு**
**மிருக்கை யிதண்மேலே மாகப் - பருக்கைக்**
**கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்**
**றொடாஅவா லென்றொழி தோள் - (திணைமாலை நூற். - 14)**

இப்பாடலின் மூலம், தோழி, செவிலியிடம் தலைவியும் நானும் தினைப்புனங் காத்துக்கொண்டு பரண்மேலிருக்கும் பொழுது யானையிடமிருந்து எங்களைக் காப்பாற்றிய தலைவனையன்றி வேறெவரிடமும் என் தலைவி அன்பு செலுத்தமாட்டாள் என்று கூறி அறத்தொடு நிற்பதைக் காணலாம்.

**(ஆ) புனல்தரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது**

என் தலைவிகடும் புனலுள் பாய்ந்து நீந்தித் தன்னை எடுத்துக் காத்த தலைவனையன்றி வேறுயாரையும் மணம்புரிய மாட்டாளென்று தோழி,செவிலியிடம் கூறி அறத்தொடு நின்றதை

**வேலனார் போக மறிவிடுக்க வேரியும்**
**பாலனார்க் கீக பழியிலாள் - பாலாற்**
**கடும்புனலி னீந்திக் கரைவைத்தாற் கல்லா**
**னெடும்பணையோ றோணோரா ணின்று - (திணைமாலை நூற். - 12)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடல் ஏதீடு தலைப்பாடு (புனலிடை உதவினான்) என்ற துறையில் அமைந்துள்ளது.

**(இ) பூத்தரு புணர்ச்சி குறித்துச் சொல்லியது**

தோழி, செவிலியிடம் கோங்கினது பூவினை என் கையில் பறித்துத்தந்த தலைவனுக்குத்தான் நம் தலைவி தகுதியுடையவள் என்று கூறி அறத்தொடு நின்றதை,

**தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்னநாள்**
**வந்தார்க்கே யாமென்பார் வாய்பாண்பாம் - வந்தார்க்கே**
**காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்**
**பூவா விளஞாழற் போது - (திணைமாலை நூற். - 39)**

என்ற பாடல் தெளிவு படுத்துகின்றது. இப்பாடல் ஏதீடு தலைப்பாடு (தழையும் கண்ணியும் தந்தான்) என்ற வகையில் இடம்பெற்றுள்ளது.

**(ஈ) தலைவனை உயர்த்திச் சொல்லியது**

கடல் சூழ்ந்த இவ்வுலகில் விற்போரில் வல்ல வீரர்களின் விழாவிலும், பெண்களின் திருமண விழாவிலும், அன்று கடற்கரையினிடத்தில் தலைவிக்கு உதவி செய்த

இச்சேர்ப்பனை போன்ற ஆடவரை நாங்கள் காணவில்லை என்று தோழி, செவிலிக்கு கூறி அறத்தொடு நின்றதை,

**வில்லார் விழவினும் வேலாழி சூழலகி**
**னல்லார் விழவகத்து நாங்காணே - நல்லாய்!**
**உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனொப் பாரைச்**
**சுவர்க்கத் துளராயிற் சூழ் - (திணைமாலை நூற். - 62)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடல் தொல்காப்பியர் கூறிய 'ஏத்தல்' (தலைவனை உயர்த்திக் கூறுதல்) என்ற வகையோடு பொருந்தியுள்ளது.

**(உ) தலைவியின் வேட்கை குறித்துச் சொல்லியது**

தலைவி வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்கு, தலைவன் தலைவியை விரும்பி நாள்தோறும் வந்தால், இவள் கொண்ட பிரிவாற்றாமையாகிய நோய் குறையுமென்று தோழி கூறி அறத்தொடு நிற்கிறாள். இதனை,

**கருங்கைக் கதவேழங் கார்ப்பாம்புக் குப்பங்**
**கிருங்கைக்கொண் டோச்சியிறா லின்றே னுகரும்**
**பெருங்கன் மலைநா டன்பே ணிவரினே**
**சுருங்கு மிவளுற்ற நோய் (கைந்நிலை - 8)**

என்ற பாடல் சுட்டுகின்றது. இப்பாடலின் செய்திகள்தொல்காப்பியா் கூறிய 'வேட்கையுரைத்தல்' என்ற வகையில்அமைந்து அறத்தொடு நிற்றல் துறையில் பொருந்தியுள்ளது.

**தலைவி கூற்றுப் பாடல்கள்**

பதினெண் கீழ்க்கணக்கில் இரண்டு பாடல்களில் மட்டும் வெறியாட்டு நிகழ்த்துவதைக் கண்ட தலைவி அறத்தொடு நிற்கிறாள்.

**வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட**
**தறியாண்மற் றன்னோ! அணங்கணங்கிற் றென்று**
**மறியீர்த் துதிரந்தூய், வேலற் றரீஇ**
**வெறியோ டலம்வரும் யாய் - (ஐந்திணை யைம்பது - 20)**

என்ற பாடலின் மூலம், தலைவி, தோழியிடம், செவிலித்தாய் தலைவன் என் மேனியின் இயல்பான தன்மையைக் களவுப்புணர்ச்சியின் மூலம் கவர்ந்து கொண்ட நிலையினை அறியாது,'தெய்வம் என்னை வருத்திற்று' என நினைத்து,வெறியாடுதலில் ஈடுபட்டு வருந்துகிறாள் என்று கூறி அறத்தொடு நின்றதை அறியமுடிகின்றது.

தலைவி, தோழியிடம் தினைப்புனங்காவலில் இருக்கும்போது மலைநாட்டுத் தலைவனிடம் நட்பு கொண்டதால் என் மேனியில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. அம்மாற்றம் தெய்வத்தால் உண்டானதென்றெண்ணி வெறியாடத் துணிந்து விட்டாளென்று கூறி அறத்தொடு நின்றதை,

**வார்குர லேனல் வளைவாய்க் கிளைகவரு**
**நீராற் றெளிதிகழ் காநாடன் கேண்மையே**
**யார்வத்தி னார முயங்கினேன் வேலனு**
**மீர வலித்தான் மறி - (ஐந்திணை யெழுபது - 13)** என்ற பாடலின் மூலம் காணமுடிகிறது.

தொல்காப்பியர் தலைவி அறத்தொடு நிற்பதாக வெளிப்படையான கருத்துகள் எதுவும் சுட்டவில்லை.

**நற்றாய் கூற்றுப் பாடல்கள்**

கீழ்க்கணக்கில் உள்ள அகநூல்களில் ஒரு பாடலில் மட்டும் நற்றாய் தலைவியின் தந்தைக்கும் தமையன்மார்க்கும் அறத்தொடு நிற்கின்றாள்.

தலைவன், வரைவு வேண்டியனுப்பிய சான்றோர்களது வருகையினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தலைவியின் தந்தைக்கும் தமையன்மார;க்கும் நற்றாய் சொல்லி அறத்தொடு நின்றதை,

**வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்**
**கோடாது நீர்கொடுப்பி னல்லது – கோடா**
**வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர;ப்**
**பொழிலும் விலையாமோ போந்து - (திணைமாலை நூற். - 15)**

என்ற பாடலின் மூலம் உணரமுடிகின்றது. தொல்காப்பியத்தில் நற்றாய் அறத்தொடு நின்றதாக எவ்விடத்திலும் வெளிப்படையான கருத்துகள் இடம்பெறவில்லை.

**முடிவுரை**

1. பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களில் அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்த ஒன்பது பாடல்களில் ஆறு பாடல்கள் ((திணைமாலை நூற். - 2, 12, 14, 39, 62; கைந்.- 8) மட்டும் தொல்காப்பிய அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்த நூற்பாவோடு பொருந்தி அமைகின்றன. மூன்று பாடல்கள் ((ஐந்திணை ஐம்பது - 20, ஐந்திணை யெழுபது -13 திணைமாலை நூற். - 15) தொல்காப்பிய அறத்தொடு நிற்றல் துறை நூற்பாவுடன் பொருந்தி அமையவில்லை. அப்பாடல்களில் தலைவி கூற்றுப்பாடல்கள் இரண்டும் நற்றாய் கூற்றுப்பாடல்கள் ஒன்றும் அடங்கும்.
2. கீழ்க்கணக்கு அகநூல்களில் தொல்காப்பியம் குறிப்பிடும் அறத்தொடு நிற்றலின் ஏழுவகைகளில் ஏத்தல் (திணைமாலை நூற். - 62), வேட்கையுரைத்தல் (கைந்நிலை - 8), ஏதீடு தலைப்பாடு (திணைமாலை நூற். - 2, 12, 14, 39) எனும் மூன்று வகைகள் பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களில் பயின்று வந்துள்ளன. எளித்தல், கூறுதல், உசாவுதல், உண்மை செப்பும் கிளவி என்ற நான்கு வகைகளும் பதினெண் கீழ்க்கணக்கு அகப்பாடல்களில் அமையவில்லை.
3. தொல்காப்பியத்தில் தலைவி அறத்தொடு நிற்பதாக வெளிப்படையான குறிப்புகள் இல்லை. ஆனால் கீழ்க்கணக்கில் இரண்டு பாடல்கள் (ஐந்திணை ஐம்பது - 20, ஐந்திணை யெழுபது - 13); தலைவி, தோழிக்கு அறத்தொடு நின்று வெறிவிலக்க வேண்டும் உள்ளத்தளாய்ச் சொல்லும் வகையில் அமைந்துள்ளன.இவ்விரண்டு பாடல்களின் பொருண்மைகள் வெறியாடலைக் குறிக்கின்றது. இச்சூழல்கள் தொல்காப்பியக் களவியலில் தோழி கூற்று நூற்பாவோடு பொருந்தி அமைகின்றன. ஆகையால் இப்பாடல்கள் தோழி கூற்றுப்பாடலாக இருந்திருக்கலாமோ என்ற ஐயம் எழுகின்றது
4. பதினெண் கீழ்க்கணக்கில் ஒரு (திணைமாலை நூற். - 15) பாடல் மட்டும் தலைவன் சான்றோரை வரைவு வேண்டி விடுத்த விடத்துத் தலைவியின் தந்தைக்கும்

தமையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்கும் வகையில் அமைந்துள்ளது. ஆனால் தொல்காப்பியர் நற்றாய் அறத்தொடு நிற்பதாக வெளிப்படையாக சுட்டவில்லை.

**சான்றெண் விளக்கம்**


1. சொ. பரமசிவம், நற்றமிழ் இலக்கணம், ப.482.
2. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.60.
3. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், பக்.133-134.
4. சரளா ராசகோபாலன், இலக்கியக் காட்சிகள், ப.13.
5. தமிழண்ணல், சங்க மரபு, ப.178.